# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8101965

1. District மாவட்டம் : Coimbatore PS: காவல்நிலையம் Vd AC Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 09/23 Date: நாள் 9.11.2023

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by The Prevention of Corruption Act 2018 Sections பிரிவுகள்: 7 and 7(A)

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 102 IPC

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : IPC

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 8.11.2023 Date to : நாள் வரை 1835

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 9.11.2023 Time : நேரம் 1300 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 9.11.2023 Time : நேரம் 1300 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o. Regional Transport office, Pollachi at about 50 km west

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. Senapathy (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Inspector of Inspection Cell (g) Address : முகவரி O/o. District Inspection Cell officer Collectorate Campus, Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   ①. Tr. P. Muruganandham, Regional Transport officer, Pollachi. ② Tmt. S. Selvi, Motor Vehicle Inspector Gr-I, Regional Transport office, Pollachi ③. Tr. R. Mohanraj S/o. Ramu, Mahalingapuram Pollachi. (Broker)

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

9/11/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

9.11.2023 at 1600 hrs

Name: பெயர் C. LATHA
Rank: நிலை Inspector of Police No. எண் ……… V & AC, Cbe.

<u>பணிந்து சமர்பிக்கப்படுகிறது:</u>

**In continuation of FIR in Coimbatore V&AC Cr.No.09/2023/AC/CB u/s 7 and 7(A) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 and 102 IPC.**

இன்று 09.11.2023 மதியம் 13.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் C.லதா ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.A.சேனாபதி, ஆய்வுக்குழு ஆய்வாளர் / முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோவை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரின் விவரம் பின்வருமாறு:- அனுப்புநர் A.சேனாபதி, ஆய்வுக்குழு ஆய்வாளர் / முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்கம், கோவை, பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோவை. ந.க.எண்.463/2023/ஐ1, நாள்: 09.11.2023, அய்யா, பொருள்: திடீர் தணிக்கை – கோயம்புத்தூர் மாவட்டம் – வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், பொள்ளாச்சி – திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது – மேல்நடவடிக்கைக்காக புகார் அளித்தல் – சம்மந்தமாக. கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் ஆகியோர் அன்றாடம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும் மற்றும் ஓட்டுனர் பயிற்சிப்பள்ளி உரிமையாளர்கள், பணியாளர்கள், இடைத்தரகர்கள் மூலம் பொதுமக்களின் வாகன ஓட்டுநர் பழகுநர் உரிமம், புதிய வாகனப் பதிவு, தகுதிச்சான்று, அடமான ரத்து மற்றம் பெயர் மாற்றம் போன்றவற்றுக்கு மாமூலாக கையூட்டு பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தை 08.11.2023 ஆம் தேதி மாலை சுமார் 06.35 மணி முதல் 09.11.2023 ஆம் தேதி காலை 05.00 மணிவரை கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.C.லதா மற்றும் காவல் குழுவினர்களுடன் திடீர் தணிக்கை செய்யப்பட்டது. மேற்படி தணிக்கையின் போது வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.முருகானந்தம் இருந்த அறைக்கு சென்று அவரது இருக்கைக்கு பின்புறம் அமைந்துள்ள கதவுக்கு வெளிப்புறமாக அவரது பார்வைக்கு அனுப்ப பெஞ்சில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கோப்புகளை சோதனை செய்தபோது அங்கு பிரவுன் நிற கவரில் மறைத்து வைத்திருந்த பணம் ரூ.50,000/– ம் கைப்பற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து வட்டார போக்குவரத்து அலுவலர்

அலுவலகத்தின் வலதுபுறம் வடக்குப்பார்த்தவாறு அமைந்துள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக அறையில் அமர்ந்திருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை–1) திருமதி.செல்வி அவர்களின் அறையை சோதனை செய்தபோது அவரது மேஜையின் மீது இருந்த அவருடைய கருப்புநிற பேக்கில் வைத்திருந்த பிரவுன் நிற கவரில் இருந்து பணம் ரூ.12,500/– கைப்பற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து அந்த அறையில் மேற்கு பார்த்தவாறு இருந்த ஸ்டீல் பீரோவைத் சோதனை செய்த போது அதில் கொடி நாள் ரசீது புத்தகத்தினுள் இருந்த கணக்கில் வராத பணம் ரூ.1100/– கைப்பற்றப்பட்டது, மேலும் அந்த ஸ்டீல் பீரோவின் மேல் வைக்கப்பட்டிருந்த Twister என பிரிண்ட் செய்யப்பட்ட பிரவுன் நிற சாக்லெட் டப்பாவில் இருந்த கணக்கில் வராத பணம் ரூ.6,300/–ம் கைப்பற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து அவ்வலுவலகத்தின் தென்மேற்கு பகுதியில் இருந்த பழுகுநர் உரிமம் வழங்கும் இடத்தின் வெளிப்புறமாக இருந்த நான்கு வெள்ளைத்தாளில் வெவ்வேறு நபர்களின் பெயர்களுடன் தொகை எழுதப்பட்டு அதனுள் இருந்த பணம் ரூ.10,000/– ம் கைப்பற்றப்பட்டது. அதன்பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு முன்பு நின்று கொண்டிருந்த புரோக்கர் திரு.மோகன்ராஜிடமிருந்து அவர் வட்டார போக்குவரத்து அலுவலர் சொல்லும் நபரிடம் கொடுப்பதற்காக வைத்திருந்த் லஞ்ச பணம் ரூ.51,920/– கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த அலுவலகத்தின் பின்புறம் சோதனையிட்டதில் அங்கிருந்த வேப்ப மரத்திற்கு கீழ் பகுதியிலிருந்து கணக்கில் வராத பணம் ரூ.27,050/– கைப்பற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவ்வலுவலகத்தின் தென்கிழக்குப் பகுதியில் இருந்த கழிவறையை சோதனை செய்தபோது அதன் ஜன்னல் மேல் இருந்து பணம் ரூ.11,130/– கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது பொள்ளாச்சி வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.முருகானந்தம் அறையில் இருந்தும், மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை–1) திருமதி.செல்விக்கு சொந்தமான கருப்பு நிற பேக்கில் இருந்தும், புரோக்கர் திரு.மோகன்ராஜிடமிருந்தும் மற்றும் அலுவலக வளாகத்தினுள் இருந்தும் மொத்த லஞ்ச பணம் ரூ.1,70,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) கைப்பற்றப்பட்டது. இதற்காக திடீர் தணிக்கை நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டது. திடீர் தணிக்கையின் போது வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.P.முருகானந்தம், மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை–1) திருமதி.S.செல்வி மற்றும் புரோக்கர் திரு.R.மோகன்ராஜ், த/பெ.ராமு, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி, ஆகியோர் அளித்த வாக்குமூலத்தை பதிவு செய்தேன். திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,70,000/–, வாக்குமூலங்கள், திடீர் தணிக்கை நடவடிக்கை மற்றும் இதர ஆவணங்களின் நகல்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். சம்மந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (Sdxxxxx) 09/11/2023

(A.சேனாபதி) ஆய்வுக்குழு ஆய்வாளர் / முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோவை, Sir, Received the complaint along with Proceedings, Statements and Cash Rs.1,70,000/- on 09.11.2023 at 13.00 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.09/2023/AC/CB u/s 7 and 7(A) of PC Act, 1988 as amended by PC (Amendment) Act, 2018 and 102 IPC on 09.11.2023 at 13.30 hrs. (Sdxxxxx) 09.11.2023 (C.Latha), Inspector of Police, Vigilance and Anti Corruption, Coimbatore.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு, திடீர் சோதனை நடவடிக்கைகள், வாக்குமூலம் மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,70,000/- ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

9/11/2023

(C.லதா)
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு, கோயம்புத்தூர்.